1992 பிப்ரவரி 10]

101—

மாநில அரசு ஐந்தாண்டுத் திட்டம்.

*வினா எண் 6267— திரு. ம. சின்னசாமி :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசைப் போல் மாநில அரசும் ஐந்தாண்டுத் திட்டம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1992–97) பரிசீலனையில் உள்ளது.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வி மாநிலத்திற்கென்று தனியாக ஐந்தாண்டுத் திட்டம் போடுகின்ற ஒரு கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதுதான். நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள் என்று கருதுகிறேன். நமது மாநிலத்திற்கு என்று தனியாக ஐந்தாண்டுத் திட்டம் போடுவதற்கான செயற்குறிப்பு உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்பது மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பொருந்தி வருகின்ற ஒன்று. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசு இந்தியா முழுவதும் தழுவிய வகையில் திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றி வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் அந்த மாநிலத்தைப் பொறுத்து நிறைவேற்ற வேண்டிய திட்டங்கள் தனியாக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம் என்ற தலைப்பின்கீழ் வருகிறது. அதுதான், அண்மையில்கூட ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த முதலமைச்சர்களும் மற்றவர்களும் போய் திட்டக் குழுவின் துணைத் தலைவரிடம் பேசி, அந்தத் திட்டத்தை இறுதி செய்கிறார்கள். அந்த வகையில் தான் தமிழ்நாடு மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் இந்த

1992–93-ம் ஆண்டுக்கான திட்டம் ரூ. 1751 கோடிக்கு நாம் நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஆகவே அது இந்த மாநிலத்தைப் பொறுத்த திட்டங்கள்தான்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு போடுகின்ற ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசின் திட்டக்குழு உதவி செய்கிறது. அதைப் போலவே மாநிலத் திட்டக் குழு இங்கேயே இருக்கிறது. நமது மாநிலத்திற்கான ஐந்தாண்டுத் திட்டங்களை மத்திய அரசிடம் தனியாகப் போட்டு, மாநில அரசின் திட்டக் குழுவின் உதவியோடு சிறப்பான முறையில் செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா? நம்முடைய மாநிலத்தில் இருப்பதைப்போல, மற்ற மாநிலங்களில் ஐந்தாண்டுத் திட்டங்கள் போடப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டம் மாநிலத்தின் சார்பாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள், மத்திய அரசின் சார்பாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்கள் என்று இரண்டும் சேர்ந்ததுதான் எட்டாவது ஐந்தாண்டுத் திட்டம். ஒரு மாநிலத்தைப் பொறுத்த வரையிலும் என்னென்ன திட்டங்களை ஏற்றுக் கொள்ளலாம், எந்த எந்தத் திட்டங்களைப் பரிந்துரைக்கலாம் என்பதற்காகத்தான் மாநிலத்தில் திட்டக்குழு ஒன்று வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையில் சென்றுதான் மத்திய அரசிடம் நாம் விவாதித்து ஒப்புதல் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அந்த வகையில்தான் திட்டக்குழுவின் துணைத் தலைவராக மத்தியில் இருக்கின்ற டாக்டர் பிரணாப் முகர்ஜியிடம் போய் பேசிவிட்டு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ரூ. 1751 கோடிக்கு இந்த 1992–93 வது ஆண்டுக்கான ஐந்தாண்டுத் திட்டத்தை நாம் நிறைவேற்றுகிறோம் என்றால், இதிலே மத்திய அரசின் பங்கு ரூ. 471 கோடியை மத்திய அரசு நமக்கு உதவியாகத் தருகிறது. மீதி ரூ. 1,280 கோடியை இந்த மாநில அரசு பல்வேறு நிதியாதாரங்களைச் சேர்த்து அதை நிறைவேற்ற வேண்டிய கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆகவே ஐந்தாண்டுத் திட்டம் என்பது மாநில அரசும் மத்திய அரசும் சேர்த்து நிறைவேற்ற வேண்டியதுதான்.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கு. லாரன்ஸ்.

திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவில் திட்டங்கள் நிறைவேற்றப் படுகிற வேளையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட

1992 பிப்ரவரி 10]

அபிவிருத்திக் கவுன்சில் போன்றவைகளில் பேசுவதைக் குறிப்பெடுத்து அதனுடைய அடிப்படையில் திட்டங்கள் மாவட்ட அளவில் நிறைவேற்றப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநில அளவிலே திட்டங்கள் பொதுவாக வகுக்கப்படுகின்றன. அதற்குப் பிறகு ஒவ்வொரு மாவட்டத்தையும் பொறுத்த வரையில் எந்தெந்த வகைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது, எதையெதை எந்தெந்த மாவட்டத்திலே ஏற்றுக் கொள்வது என்று மாவட்ட அளவிலே நம்முடைய திட்டக் குழு நிறைவேற்றுகிறது. உதாரணத்திற்கு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ரூ. 176 கோடி மின் சக்திக்காக ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களைத் தழுவிய வகையிலேதான் நிறைவேற்றப்படுகிறது. அதைப் போலவே எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2550 கோடி என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். இந்த ரூ. 2550 கோடியை இந்த மாநிலத்தினுடைய பல்வேறு மாவட்டங்களுடைய தேவையைக் கருதி, அவசியத்தைக் கருதி ஆங்காங்கே எவ்வளவு ஒதுக்கீடு செய்வது என்பதை மாநில திட்டக் குழு மனதிலே வைத்துக் கொண்டுதான் திட்டங்களை நிறைவேற்றுவதிலே ஈடுபட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 106. திரு. ம. தனபால். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

106—

திருப்போரூர் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 413—திரு. ம. தனபால் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் பேரூராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையமாக செயல்படும் மருத்துவ மனையை அரசினர் பொது மருத்துவ மனையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படத் துவங்கும்?